விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 பங்குனி 3 ஜ. ஆகிர் 1 இதழ் 35

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 17—3—83

## மாணவர்கள் கோரிக்கைக்கு

# நிர்வாகம் இணக்கம்?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் சமர்ப்பித்த இரு கோரிக்கைகளுக்கும் சாதகமான பலன் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமர்ப்பிக்கப்பட்ட இரு கோரிக்கைகள் சம்பந்தமாக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், பல்கலைக்கழக மாணவர் குழுத் தலைவர் பொறியியலாளர் ஸ்டாலின் கல்பகேயுடன் நேற்று தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

"யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் யாராவது கைது செய்யப்பட்டால், அவ்விபரங்கள் உடனடியாக உபவேந்தர் வித்தியானந்தனுக்குத் தெரியப்படுத்தப்படவேண்டும். இப்படித் தெரியப்படுத்துவதால், சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள், உறவினர்களுக்குத் தகவல்கொடுக்க வசதியாக இருக்கும்.

கைது செய்யப்படுபவர்கள் விசாரிக்கப்பட்டு, குற்றமில்லாத பட்சத்தில் இருபத்தி நான்கு மணி நேரத்தில் விடுவிக்கப்படவேண்டும். மாணவர்கள் இருக்கும் வீட்டுச் சொந்தக்காரர்களைத் தொந்தரவு செய்யக்கூடாது."

இந்த இரு விஷயங்களும் மேற்குறிப்பிட்ட வகையில் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்று பேராசிரியர் கல்பகே பேராசிரியர் வித்தியானந்தனிடம் உறுதி தெரிவித்தார்.

இந்த முடிவு குறித்து யாழ். பல்கலைக் கழக மாணவர் அவைக்கு, உபவேந்தர் தெரியப்படுத்தியபோதிலும், மாணவர் அவைத் தலைவர் திரு. ஸ்ரீஸ்

(8-ம் பக்கம் பார்க்க)

## ★ தலைமன்னர் வழியாக இந்தியா செல்வோரிடமிருந்து

# கப்பல் கட்டணமாக ரூபா 50

# அறவிட முடிவு!

## அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

தலைமன்னாரிலிருந்து கப்பலில் இந்தியா செல்லும் ஒவ்வொரு பிரயாணியிடமும் புறப்பாட்டுக் கட்டணமாக 50 ரூபா அறவிடுவதென்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இந்த 50 ரூபாவில் 50 சதவீதம் மன்னார் அபிவிருத்தி சபைக்கு வழங்கப்படும்.

தாயகம் திரும்புவோரிடமிருந்து இப்பணம் அறவிடப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைமன்னாரில் மின்சார, சுகாதார வசதிகளுக்கும், வீதி சீரமைப்புக்குமாக இந்நிதியில் ஒரு பகுதியை மன்னார் அபிவிருத்திச் சபைக்கு வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. (ச)

## ஜனாதிபதி ஜே. ஆருக்கு

## 'எஸ். டி. புகழ்மாலை

[கொழும்பு]

"இந்நாட்டின் இனிய தலைமுறையினரின் நலனைப் பாதுகாக்கக்கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி திரு ஜே. ஆர் ஜயவர்த்தன" என்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்துவிலக்கப்பட்ட திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா நேற்று பாராளுமன்றத்தில் புகழ்மாலை சூட்டினார்.

ஜனாதிபதியால் இப்போது நாட்டில் அமுல்படுத்தப்பட்டு வரும், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் நாட்டை முன்னெடுத்துச் செல்லவல்லன என்றும் திரு. எஸ். டி. குறிப்பிட்டார்.

தேசிய அரசு ஒன்று அமைக்கப்படவேண்டியதன் அவசியத்தையும் அவர் வற்புறுத்தினார். (இ)

## யாழ். மாவட்ட புடவை நெசவாளர் சங்கம்

# நிர்வாகசபை கலைக்கப்பட்டது!

### புதிய நிர்வாகிகள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்க நிர்வாக சபை கலைக்கப்பட்டு புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர்திரு. எஸ். சிவதாசன்[தலைவர்], யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. எஸ். எஸ். தர்மபாலன் யாழ்.

( 8ம் பக்கம் பார்க்க)

## "எமது தமிழ் இளைஞர்கள்

## புலிகள், பயங்கரவாதிகள் அல்ல; அவர்கள் விடுதலைப் போராளிகள்!"

### பாராளுமன்றத்தில் செல்லத்தம்பு

[கொழும்பு]

"தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளும்நிலை வந்தே தீரும். அந்த நிலை வந்தால் தான் சிங்கள மக்களும் உயர்ந்த நிலையை அடைவார்கள். அதன் பின் சிங்களவர் தமிழருக்கிடையில் நெருங்கிய உறவு நிலவும்."

இவ்வாறு ஊர்காவற்துறை எம். பி. திரு. கி. எச்ஸ். செல்லத்தம்பு வரவுசெலவுத் திட்டத்தின் மீது நேற்று உரைநிகழ்த்தும்போது கூறினார்.

"எமது இளைஞர்கள் மத்தியில் இன்று அமைதியின்மை நிலவுகின்றது. இன்றைய பிரச்னைக்கு இதுதான் காரணம் என்று கூறிய திரு. செல்லத்தம்பு, 1977ம் ஆண்டு தேர்தலின்போது உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கப்போவதாக உறுதியளித்திருந்தீர்கள். இப்போ

(8-ம் பக்கம் பார்க்க)

## "மாவட்ட வரவு செலவுத் திட்டம் தயாரிக்க வேண்டும்"

### சபையில் 'நீலன்' கன்னிப்பேச்சு

[கொழும்பு]

"யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வன்னி மாவட்டங்களுக்கு குறைந்தளவே வெளிநாட்டு உதவியும், மூலதன செலவினமும் வழங்கப்படுகின்றது."

பாராளுமன்றத்தில் வட்டுக்கோட்டை எம். பி. கலாநிதி

[8-ம் பக்கம் பார்க்க)

# உஷார் நிலையில் பொலிஸ் நிலையங்கள்!

(கொழும்பு)

எந்த ஒரு நிலைமையையும் சமாளிக்கும் வகையில் பொலிசார் உஷார்நிலையில் இருக்கவேண்டுமென ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பொலிஸ் மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

கிழக்குமாகாணங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்புக் குறித்து பாதுகாப்புச் சபைக் கூட்டம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி இந்த உத்தரவை விடுத்துள்ளார். (இ)

## "அரசாங்கக்கட்சி எம். பிக்களை ஒருவர் ஆட்டுவிக்கிறார்!"

### 'பட்ஜட்' விவாதத்தில் வவனியா 'சிவா'

(இ. கந்தசாமி)

"அரசாங்கக் கட்சி எம். பிக்களை ஒருவர் ஆட்டுவிக்கிறார். அவரது பேச்சுக்கேற்ப ஆடுகிறீர்கள். ஆனால், நாங்கள் அப்படியல்ல. எந்தப் பிரச்னையும் சுதந்திரமாகச் சிந்தித்து எமது மக்களுக்காகக் குரல் எழுப்பி உழைக்கின்றோம்" என்று வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் 'பட்ஜட்'மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:- "முன்னைய அரசு பற்றியும், இப்போதைய அரசு பற்றியும் மாறி மாறிக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதால் இந்த நாட்டில் வாழும் 148 லட்சம் மக்களது பிரச்னைகள் தீர்ந்துவிடமாட்டாது.

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த எம். பி.க்களாகிய நீங்கள் எந்தக் கருத்தையும் துணிவுடன் சொல்லமுடியாத பரிதாப நிலையில் இருக்கிறீர்கள். உங்களை ஆட்டுவிக்க ஒருவர் இருக்கிறார். அவர் சொல்கிறபடி நீங்கள் ஆடுகிறீர்கள்.

#### பொம்மை ஆட்டம்

"அம்பலாங்கொடையில் பொம்மைக் கூத்து பார்த்திருக்கிறேன். பொம்மையின் கயிற்றை ஒருவர் இழுப்பார். அந்த இழுப்புக்கேற்றவாறு பொம்மை ஆடும்.

"ஒப்புக்கு இதனை ஏற்க நீங்கள் மறுத்தாலும், உள்ளத்

[8-ம் பக்கம் பார்க்க]

## யாழ்.நகரில் கார்ல்மார்க்ஸ் நூற்றாண்டு நினைவுதினம்

[யாழ்ப்பாணம்]

கார்ல்மார்க்ஸின் நூற்றாண்டு நினைவுதினக் கூட்டம் யாழ். வீரசிங்க மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை நடைபெறும்.

இக்கூட்டத்தில் திரு. அ. வரதராஜன், திரு. மு. திருநாவுக்கரசு, திரு. செ. கணேசலிங்கன் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

கூட்டம், மார்க்ஸின் மரணத்தின்போது ஏங்கெல்ஸ் ஆற்றிய உரையை வாசிப்பதுடன் ஆரம்பமாகும். மார்க்ஸ் நூற்றாண்டு தினக்குழு இக்கூட்டத்தை ஒழுங்குசெய்துள்ளது.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

2 சிலிண்டர் டீசல் பெற்றர் இயந்திரமும் 5 K. V. A. டைனமோவும் உடன் விற்பனைக்குண்டு. சிவபாலமூர்த்தி 6/2, ஆத்தியடி புது வீதி, யாழ்ப்பாணம். 6492

100 வீதம் மறு சீரமைக்கப்பட்ட HONDA - C - 90 1979-ம் ஆண்டு மொடல் மோட்டார் சைக்கிள் மிகச்சிறந்த நிலையில் விற்பனைக்குண்டு. விசேஷ விலைக்கழிவு கொடுப்படும். தொடர்பு கொள்க: N. சுசந்திரராஜா இல. 3, கோவில் வீதி, (வேதக்கோவில் அருகில்), நுணுவில் மேற்கு. நுணுவில், சாவகச்சேரி. (6552)

அரியாலை A. V. றோட்டில் ஒன்றரைப் பரப்புக் காணி வீடு, கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: என். சந்திரன், 104/1 A. V. றோட், அரியாலை. (6562)

மஸிபேர்குசன் ட்றக்டர் 36 ஸ்ரீ 6108 (Messy Fuguson Tractor) பெட்டி கலப்பை, டிஸ் உட்பட உடன் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தேவையாயின் வங்கிக்கடன் வசதி செய்துதரப்படும். மாணிக்கம் பயஸ் சாவிஸ், பழைய பொலிஸ் நிலைய ஒழுங்கை, கோப்பாய் தெற்கு, கோப்பாய். (6559)

## தேவை

காசிளர் தேவை A/L படித்த 24 வயதுக்குட்பட்ட யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர் மட்டும் 22-3-83 முன் விண்ணப்பிக்கவும், கொழும்பு ஸ்ருடியோ, 164, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (6543)

## சேவை

டைப் ரைட்டிங் சர்வீஸ் ஆங்கிலத்தில் கடிதங்கள் டைப் செய்து கொடுக்கப்படும். K. L. M. Krishna pillaiy, ஸ்ரீ பராசக்தி சோதிட நிலையம், 151, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (6548)

எல்லா ரகத்திலுமுள்ள றேனியோ மெஷின்களும் பழுது பார்த்து செய்து கொடுக்கப்படும். இந்த தொழில் நுட்ப வல்லுனரை குமரன் ருறிஸ்றிஇன் 67, ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம் விலாசத்தில் தொடர்பு கொள்ளலாம். அல்லது சந்திக்கலாம். தொலைபேசி நம்பர் 23753. (6553)

## தவறிவிட்டது

14-3-83 காலை 9 மணியளவில் 751 இலக்க பஸ்ஸில் புத்தூர் — பருத்தித்துறைக்கிடையில் எனது "கெருடா" கைக்கடிகாரம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் அல்லது தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து தெரிவிக்கவும். பொ. சண்முகநாதன், சங்குவேலி தெற்கு, மானிப்பாய். (6550)

## WANTED

Manager, Supervisor, Accounts Clerk, Blowers and Female Labourers for a large Glass factory in Colombo and Jaffna. Apply with full bio-data on or before 31st March, 83. Salary negotiable. Management Information Service, 68, Kannathiddy Road, Jaffna. Tele: 22519 6564

## COURSE OF PRACTICAL TRAINING FOR ACCOUNTANCY STUDENTS

A 6 months full time courses of Training with Theory and Practicals. Preference will be given to Reconized Accounting Bodies, Degree/Diploma Examination.

Please call over at:
MANAGEMENT INFORMATION SERVICE
68, Kannathiddy Road, Jaffna. Tele: 22519
6565

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ் சென்ற மாரிசன் கூடல் சின்னக்குட்டி செல்லத்துரை என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர் செல்லத்துரை மகள் பெண் ஞானரஞ்சினி 28, ஐயனார் கோயி வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன நிர்வாகம் இல. 123

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982-ம் ஆண்டு பங்குனி மாதம் 17-ஆம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
கு. வ. கணேசன்,
பதிவாளர்.

காரணம் காட்டும் திகதி 30-3-83க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ம. சி. சிவசாமி,
19-1-83

1982-ம் ஆண்டு மாசி மாதம் 15 ஆந் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.

எம்.கே. சுப்பிரமணியம்,
மனுதாரின் சட்டத்தரணி.
(6489)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## மீண்டும் தலைவர்

(பண்டத்தரிப்பு)

கட்டுவன் கிராமோதய சபையின் புதிய தலைவர் தெரிவு கடந்த 6-ம் திகதியன்று விசேட சேவை அலுவலர் திரு. கு. கனகலிங்கம் தலைமையில் வர்த்தலை விளான் அ.மி.த.க பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது திரு. ந. கிருஷ்ணமூர்த்தி 12 வாக்குகளைப் பெற்று மீண்டும் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மல்லாகம்

மல்லாகம் கிராமோதய சபையின் புதிய தலைவர் தெரிவு விசேட சேவை உத்தியோகத்தர் திரு. கு. கனகலிங்கம் தலைமையில் மல்லாகம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற போது திரு. எஸ். ஸ்ரீ பாஸ்கரன் மீண்டும் தலைவராக போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## திருத்தம்

12-3-1983 வழ. இல. ஈடு 1313

விற்பனவுவிளம்பரத்தில்மொத்தம் ரூபா 4450/- கழித்துமிகுதி அறவிடப்படும் என்பதற்கு பதில் ரூபா 4500/- என பிழையாக பிரசுரிக்கப்பட்டதை திருத்தி வாசிக்கவும்.

க. நவரத்தினம்,
நீதிமன்ற விற்பனையாளர்.
வட்டு. கிழக்கு,
வட்டுக்கோட்டை.
(6497)

## எம். ஜி எம். வீடியோ ஹோம்

M. G. M. VIDEO HOME

யாழ். நகரில் V. G. P. வீடியோ கசட் (Original) விநியோகஸ்தர்களாக செயற்படுகின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

★ படங்களை வீடியோ கசட்டில் உடனடியாக பதிவு செய்து கொடுக்கப்படும்.

★ வீடியோ கசட்டுகள் (மூலப்பிரதிகள் Original) வாடகைக்கு கொடுக்கப்படும், (நாளொன்றுக்கு 15 ரூபாய் மட்டுமே)

தற்காலிக முகவரி:
37/12, 1-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(6551)

புதிய

## "லக்ஸ்பிறே"

இந்நாட்டில் எல்லோரும் விரும்பி சுவைக்கும் பால் உணவு இப்பொழுது புதிய அழகான 500 கிறாம் பக்கற்றுகளில் அடைக்கப்படுகிறது.

வியாபாரிகளே!

உங்கள் தேவையை நாம் உடனே பூர்த்தி செய்யத் தயாராக இருக்கிறோம்.

யாழ், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உத்தரவு பெற்ற விநியோகத்தர்கள்:

**சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிட்டெட்,**

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22134, 23819

சென்னை-ரூபவாகினி
நிகழ்ச்சிகளைத் தெளிவாக கண்டு களிக்க தொலைக்காட்சி ஏரியல் அமைப்பதற்கு...

**வீனஸ் நியூவீனஸ்**


ரி.வீ., றேடியோ மணிக்கூடுகளை உத்தரவாதத்துடன் பழுதுபார்த்துக் கொள்ளவும்

புதிய ரி.வி, றேடியோ, மணிக்கூடுகளை வாங்கிக்கொள்ளவும்

விரும்பிய பாடல்களை பதிவு செய்துகொள்ளவும்

மற்றும் மங்களவைபவங்களை வீடியோவில் படம்பிடித்துக் கொள்ளவும்

மேலும் யாழ். நகரில் உத்தரவாதத்துடன் ரி.வீ ஏரியல் பொருத்திக்கொள்ள



**வீனஸ்** 266/1, ஸ்ரான்லி வீதி ஸ்ரீதர் தியேட்டர் அருகில் யாழ்ப்பாணம்

**நியூ வீனஸ்** 79/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## நாளை நடக்கும் விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யவன மகா வித்தியாலய இல்லங்களின் வருடாந்த விளையாட்டுப்போட்டி நாளை பிற்பகல் நடைபெறும்.

பிரதம விருந்தினராகக் கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கரி கலந்துகொள்கிறார்.

சிறப்பு விருந்தினராக வடமாநிலக் கல்விப் பகுதியின் பிரதம கல்வியதிகாரி திரு. வே. சபாநாயகம் கலந்து கொள்கிறார்.

பரிசில்களைத் திருமதி புஷ்பா சபாநாயகம் வழங்குவார்கள்.

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 3-ம் திகதி
வியாழக்கிழமை
(17—3—83)

மேடம்: தொழில் புரியும் இடத்தில் தொல்லைகள் தோன்றக்கூடும், இதன் மூலம் பொருள் விரயத்திற்கும் இடமுண்டு, மேலதிகாரிகளின் கண்டனங்களுக்கும் ஆளாவீர்கள்.

இடபம்: இறை வழிபாடு மேலிடும், இதயத்தில் அமைதி ஏற்படும், கண்ணியமான காரியங்களை முடிப்பதில் வெற்றி காண்பீர்கள், சுற்றாடலில் செல்வாக்குவளர்ச்சியடையும்.

மிதுனம்; எதிர்பார்த்த காரியத்தில் தடைகள் ஏற்படும், அவசரமுடிவு ஆபத்தில் சிக்கவைக்கலாம், குடும்பத்தில் பதட்ட நிலை தென்படும், நாவடக்கம் விரும்பத்தக்கது.

கடகம்: விலை பொருள் விருத்தியுடன் விருந்துக்கும் இடமுண்டு. தாய்வழித்தனமும் தாராளமாகக் கிடைக்கும், புதிய வாகனம் கொள்முதல் செய்ய உகந்தநாள்.

சிங்கம்; உள்ளம் இன்பத்தால் துள்ளும், புத்திரர்களால் புதிய உற்சாகம் பிறக்கும், தனக்கென வாழாப் பெருவாழ்வு வாழ்வீர், பொன்னான நாள்.

கன்னி: இதயம் எரிமலையாகும், எதிரிகள் தாக்குவர், இடமாற்றத்தில் பொருள் விரயமாகும், இருள் சூழ்ந்த நிலையில் ஒளிக்கோடுகள் தென்படலாம்.

துலாம்: குடும்ப வழியால் மனதுக்கு நிம்மதி பிறக்கும், நீண்டநாள் பூமிப்பிணக்கு சமரசமாக முடிவடையும், காதல் விவகாரங்களில் வெற்றியுண்டு.

விருச்சிகம்: அரசபயத்திற்கு இடமுண்டு, வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ளவேண்டாம், மின்னியல் பொறியியல் பகுதிகளில் கடமையாற்றுவோர் கவனம் வேண்டும்.

தனு: பிதாவழிமூலம் நல்ல செய்தி கிடைக்க இடமுண்டு, முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் உங்களுக்கு ஆதரவு தருவார், தருமகாரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்.

மகரம்: பூமியால் லாபம் உண்டு, பொதுசனத்தலைமைக்கான வாய்ப்புக் கிடைக்கும், கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளை ரசிப்பதில் காலத்தைக் கடத்துவீர்கள்.

கும்பம்: வட்டிக்கடைவைத்திருப்பவர்களுக்கு அதமேலும் குட்டிபோடும், புத்திரர் ஒருவரின் வெளிநாட்டுப் பயணத்திற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மீனம்; எதிர்பாராத செலவினங்களால் பாதிக்கப்படுவீர்கள், சமீபத்தில் நடைபெற்று முடிந்தசம்பவம் ஒன்று மனதிற்கு வேதனையைத் தரலாம், தொல்லைகள் அதிகரிக்கும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

# 'கொலம்பியா' வுடன் இணைந்து விண்வெளி செல்லும் இந்திய செய்மதி!

புதுடில்லி மார்ச் 16

இந்தியாவின் பலநோக்கு செய்மதியான 'இன்சார்ட் ஒன்று பி' இன்னும் ஆறு மாத காலத்தில் விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இச் செய்மதி அமெரிக்காவின் விண்வெளி விமானமான 'கொலம்பியா'வில் இணைக்கப்பட்டே விண்வெளிக்கு அனுப்பப்படும். 'இன்சார்ட் ஒன்று பி, யைக் கொண்டு செல்லவுள்ள கொலம்பியாவின் அப்பயணம் எட்டாவது விண்வெளிப்பயணமாக இருக்குமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இப்பயணத்துக்கென 'இன்சார்ட் ஒன்று பி' இந்தியாவிலிருந்து கலிபோர்ணியாவுக்கு அனுப்பிவைக்கப்படும். இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிபுணர்களில் ஒருவரான பேராசிரியர் யு. ஆர். ராவோ இதுபற்றித் தெரிவிக்கையில், இன்சார்ட் ஒன்று பி' இறுதிக்கட்ட பரிசோதனைகளுக்குள்ளாகியுள்ளதென்றும், இப்பயணம் வெற்றிகரமாக முடிவடையுமென்றும் கூறினார். (கி)

# சர்வதேச நாணயசபைக்கு அமெரிக்கா கடனுதவி!

வாஷிங்டன் மார்ச் 16

சர்வதேச கடன்பிரச்னைகளைத் தீர்த்துவைக்க அமெரிக்கா முன்வந்துள்ளது. ஜனாதிபதி றேகன் இப்பிரச்னையைத் தீர்த்துவைப்பதற்கென 840 கோடி அமெரிக்க டாலர்களை சர்வதேச நாணயசபைக்கு கொடுத்தவும் பிரேரணையை அமெரிக்க செனட்டில் முன்வைத்தார்.

இப்பிரேரணையை அமெரிக்க செனட்டில் வெளிநாட்டுக்குழு ஏற்றுக்கொண்டு கடன் வழங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

சர்வதேச நாணய சபைக்கு கடன் வழங்குவதில் ஏற்பட்டுள்ளசிக்கல்களைத் தீர்க்கும்வகையிலும் வளர்முக நாடுகளின் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டுமே அமெரிக்க இவ்வாறு கடனுதவி வழங்க முன்வந்துள்ளதென்று தெரிவிக்கப்பட்டது. [கி)

7-வது அணிசேரா மகாநாடு

# வெற்றிகுறித்து இந்திய ஜனாதிபதி பாராட்டுபசாரம்!

புதுடில்லி மார்ச் 16

ஏழாவது அணிசேரா உச்சி மகாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டதை முன்னிட்டு இந்திய ஜனாதிபதி ஸெயில்சிங் பாராட்டு வைபவமொன்றை நடத்தினார்.

இந்த வைபவத்தில் உபஜனாதிபதி ஹிதாயத்துல்லா பிரதமர் திருமதி இந்திரா காந்தி ஆகியோர் உட்பட சபாநாயகர் மற்றும் அமைச்சர்கள் ராஜதந்திரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான 'ராஜ் பவனில்' உள்ள மொஹலாலயப் பூங்காவில் இப்பாராட்டு உபசாரம் நடைபெற்றது.

இதேவேளை இந்திய முன்னாள் பிரதம மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் பொதுக்கூட்டமொன்றில் அணிசேரா உச்சி மகாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டதைப் பகிரங்கமாகப் பாராட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

45, 000 பேர் எல்சல்வடோரில்

# படுகொலை!

லண்டன், மார்ச் 16

எல்சல்வடார் ஆட்சியின் படுகொலைகள் பற்றிப் புதிய தகவல்கள் கிடைத்துள்ளன.

றோமன் கத்தோலிக்க திருச்சபையின் மதிப்பீடுகளின்படி சென்ற வாரத்தில் எல்சல்வடாரில் 258 பேர் கொலைப்பட்டனர். இரகசியப் பொலிசாரால் பலர் கடத்திச்செல்லப்பட்டனர். மற்றும் பலரைக் காணவில்லை. இவ்வாறு சான் சால்வடார் ஆர்ச் பிஷப் ஆர்துரோ ரிவேரா-இ-தாமஸ் கூறினார்.

கடந்த மூன்றாண்டுகளுக்கு மேலாக, படுகொலை என்பது சால்வடார் ஆட்சியாளர்களின் 'வாழ்க்கை முறை'யாக மாறிவிட்டது என்று அமெரிக்கப் பத்திரிகையாளர் ஒருவர் கூறினார்.

45 லட்சம் மக்களைக் கொண்ட இந்தச் சிறிய மத்திய அமெரிக்க நாட்டின் பிரஜைகள் 45,000 பேர் படுகொலைசெய்யப் பட்டுள்ளனர். 1980 மார்ச் முதல், இந்த நாட்டில் சகல அரசியல் சட்ட உத்தரவாதங்களும் அழிக்கப்பட்டு, மிகக்கொடிய ராணுவச் சட்டம் அமுல்செய்யப்படுகிறது. அந்தச் சட்டத்தின் கீழ் உளவு நிறுவனங்களும், பாசிஸ்டுவெறிகொண்ட பயங்கர ஸ்தாபனங்களும், கொலைகாரக் கும்பல்களும் காலிகளின் கூட்டங்களும், அட்டூழியம் புரிந்துவருகின்றன. தேசவிடுதலைப் படையினருக்கு எதிராகப் போராடும் ராணுவம், அந்தப் பிரதேசங்களை மோசமான கொள்கையைக் கடைப்பிடிக்கிறது. சென்ற ஆண்டில் சுமார் 5,000 எல்சல்வடார் மக்கள் ஆட்சிக்குப் பலியாயினர்; உயிர்தப்பிப் பிழைக்கும் நோக்குடன், பல்லாயிரக்கணக்கான மக்கள் நாட்டைவிட்டு ஓடுகின்றனர்'' என்று மனித உரிமைகள் பற்றிய சால்வடார் கமிஷன் தெரிவித்துள்ளது.

இதேநேரத்தில் சால்வடார் ஆட்சிக்கு மேலுமேலும் உதவியை நீடிக்க அமெரிக்க நாடாளுமன்றம் அனுமதி வழங்கவேண்டும் என்று ஜனாதிபதி றீகன் கோரியுள்ளார்.

''எல்சல்வடார் புரியும் அட்டூழியங்களுக்கு நேரடிக் கூட்டாளியாக றீகன்அரசு விளங்குகின்றது. எல்சல்வடாரில் மக்களைக் கொன்று குவிக்கப் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் பெரும்பாலும் அமெரிக்க ஆயுதங்களே. எல்சல்வடார் கொலைகாரர்கள், அமெரிக்க ராணுவத் தளங்களில் பயிற்சி பெற்றவர்கள்; அவர்களின் மேற்பார்வையாளர்களாக விளங்குவோர் அமெரிக்க ராணுவ ஆலோசகர்கள்'' என்றும் மனித உரிமைகள் பற்றிய கமிஷன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## பிரதமர் தட்சருக்கு கடிதத்தில் வெடிகுண்டு

லண்டன், மார்ச் 16

பிரிட்டிஷ் பிரதமர் திருமதிமார்கிரெட் தட்சருக்கு கடிதமொன்றில் குண்டு வைத்து அனுப்பப்பட்டது.

ஆறும் திகதி அக்கடிதம் அவரைச்சென்றடையு முன்னர் பொதுகாப்புச் சேவையினரால் கைப்பற்றப்பட்டு விட்டது.

பிரதமர் திருமதிதட்சரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு விலாசமிடப்பட்டே இக்கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. இதனை அனுப்பியவர்களைக் கண்டுபிடிக்கும் வகையில் பிரிட்டிஷ் புலன் விசாரணைப் பகுதியினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். [கி]

## டெஸ்ட் கிரிக்கெட்

போர்ட் ஒப்ஸ்பெயின் மார்16

மேற்கிந்திய - இந்திய கிரிக்கெட் அணிகளுக்கிடையேயான இரண்டாவது டெஸ்ட்டின் இரண்டாம் இன்னிங்ஸில் இந்தியா 2 விக்கட்டுகளை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

அமரநாத் 54 ஓட்டங்களையும், வெங்கசாகர் 20 ஓட்டங்களையும் பெற்றனர். கவாஸ்கர் 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

மேற்கிந்திய அணி முதலாவது இன்னிங்ஸ் 394 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்தியா 175 ஓட்டங்களைப்பெற்றது. (கி)

''கட்சி தீர்மானித்தாலும் கூட

# மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்கமாட்டேன்!

## வட்டு. எம். பி. உறுதி

'மாவட்டமந்திரிப்பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எனது கட்சியின் தலைமைப் பீடம் தீர்மானித்தாலும் கூட ஏற்றுக்கொள்ள மாட்டேன்'' என்று வட்டுக்கோட்டை எம். பி. கலாநிதி நீலன் திருச்செல்வம் உறுதியாகத் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை எம். பி. யாக தமிழர்விடுதலைக்கூட்டணியால் நியமிக்கப்பட்ட கலாநிதி நீலன் திருச்செல்வம் முதல்தடவையாக அங்கு விஜயம் செய்திருந்தார் அல்லவா! தமது விஜயத்தின் பின்னர் யாழ்ப்பாணத்திலுள்ள உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கியிருப்பதாக அறிந்து அவரைப் அங்கு பேட்டிகாணச் சென்றிருந்தேன்.

அவர் அன்று மாலை கொழும்பு திரும்பவுள்ளதாகவும், அதற்கு முன்னர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் கோப்பாய் எம். பி. திரு. ஆ. மு. ஆலாலசுந்தரத்தைப்பார்த்துவிட்டு வரச் சென்றுவிட்டதாகவும் கூறினார்கள்.

அன்று பிற்பகல் 5-30 வரை காத்திருந்து விட்டு திரும்பி விடலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த சமயம் மினிவானொன்றில் கலாநிதி நீலன் திருச்செல்வம் வந்திறங்கினார்.

சந்திப்பு: ஏ. வி. மாணிக்கம்

''வணக்கம் உங்களை அதிக நேரம் தாமதிக்க வைத்து விட்டேன் என்று சொல்லிக் கொண்டே வீட்டுக்குள் வந்தார்.

'யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை நிறைவேற்றுக்குழு மாதம் ஒரு தடவையாவது கூடுவது கிரமமாக இருக்கிறது என்றும் யாழ். மாவட்ட அமைச்சர் இல்லாமல் நிறைவேற்றுக்குழு கூட்டத்தை நடாத்த முடியாதிருப்பதுடன் பிரேரணைகள் நிறைவேற்ற முடியாதிருக்கின்றது தென்றும் யாழ் மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர்திரு சு. நடராசா கடந்த மாவட்ட அபிவிருத்திசபைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார் இந்த நிலையில் ஜனாதிபதியின் நல்லெண்ணத்தைப் பெற்றுள்ள நீங்கள் மாவட்ட மந்திரிப் பதவி வழங்கினால் ஏற்றுக் கொள்வீர்களா? என்று முதல் கேள்வியைத் தொடுத்தேன்.

பதில்: நிச்சயமாக ஏற்றுக் கொள்ளமாட்டேன் எனது கட்சியின் தலைமைபீடத்துக்குக் கட்டுப்பட்டுத்தான் நான் நடந்து கொள்வேன்.

கேள்வி; மாவட்டமந்திரிப் பதவியை ஏற்கவேண்டும் என்று கட்சித்தலைமைப்பீடம் தீர்மானித்தால் உங்கள் நிலை என்ன?

பதில்: நீதியாக இயங்கும் ஒரு எதிர்க்கட்சியாக எமது கட்சி இருக்கிறது. இந்த நிலையில் கட்சி இது விஷயம் குறித்து தீர்மானத்துக்கு எடுத்துக் கொள்ளமாட்டாது என்று நினைக்கின்றேன். அப்படி கட்சி தீர்மானித்தாலும் நான் மாவட்ட மந்திரிப்பதவி ஏற்க மாட்டேன்.

### ஆயுதப்படைகளின் அட்டூழியம்

கேள்வி: வடபகுதியில் ஆயுதப்படையினர் பொதுமக்களை இம்சைப்படுத்தி வருவது நிரந்தர சம்பவமாகி விட்டது ஜனாதிபதியுடன்தொடர்புகொண்டு நீங்கள் வடபகுதியிலிருந்து ஆயுதப்படையினரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தால் என்ன?

பதில்; இராணுவத்தை வெளியேற்றுவது தனிப்பட்ட விஷயமல்ல எனினும்வடபகுதியில் அமைதியான சூழ்நிலை உருவாக வேண்டும் இன்று வடபகுதியில் மக்கள் அமைதியாக வாழ முடியவில்லை: முக்கிய சில அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை இதற்குப் பதிலாக வடபகுதியில்ஆயுதப்படையினரை அரசாங்கம் அமர்த்தியிருந்தது அதன் விளைவு வேறுவிதமாக மாறிவிட்டது.

''தென்னிலங்கையில் சில தொகுதிகளில்ஊர்காவல்படைகள் அமைக்கப்பட்டு அவை சேவையாற்றி வருகின்றன வடபகுதியிலும் ஊர்காவல் படைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் அவை செயல்படத் தொடங்கிவிடும்.

கேள்வி: இன்றைய சூழ்நிலையில் கொழும்பில் இருந்து கொண்டு எப்படி உங்கள் தொகுதி அபிவிருத்தி, பாதுகாப்பு போன்றவற்றில் ஈடுபடுவீர்கள்? மக்களின் குறைகளை எப்படித் தீர்க்கப்போகிறீர்கள்!

பதில்: கிழமையில் இருநாட்களுக்கு எனது தொகுதியில் உள்ள காரியாலயத்திலிருந்து கொண்டு வேலைகளைக் கனிக்கப்போகின்றேன். அத்துடன் எனது தொகுதியில்தான் எதிர்க்கட்சித் தலைவர் இருக்கிறார். மற்றும் இரு மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் இருக்கிறார்கள்: எனது செயலாளர் இருக்கிறார். மற்றும் கட்சியில் தீவிரமாக உழைப்பவர்கள், நல்ல அறிவாளிகளும்கூட இருக்கிறார்கள். எமது கட்சி ஒருபலமான அமைப்பைக் கொண்டது. இதனால் யாரும் குறை சொல்லக்கூடிய அளவுக்கு கட்சி உறுப்பினர்கள் நடந்துகொள்ள மாட்டார்கள் என்பது எனது திடமான நம்பிக்கை.

கேள்வி: காலஞ்சென்ற எம். பி. திருநாவுக்கரசு வட்டுக்கோட்டைத் தொகுதியின் அபிவிருத்திக்கு பாரிய திட்டங்களைக் கொண்டுவந்து தொழிற்பேட்டைகள் அமைக்கப்போவதாகச் சொல்லியிருந்தார். நீங்கள் இது சம்பந்தமாக ஏதும் அபிவிருத்தி வேலைகள் செய்ய உத்தேசித்துள்ளீர்களா?

பதில்: கல்வி, கலாசாரங்களுடனும் நீர், மின் வீட்டுத் திட்டம் போன்ற தேவைகளைக் கொண்டது எமது தொகுதி. அடுத்த தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பபன். இது வெளிநாட்டுஉதவிகள் மூலமும் செய்யக் கூடியதாக இருக்கும். எதற்கும் எமது கட்சியின் ஆலோசனையுடன் செயல்படுவேன்.

### தமிழ்ஈழம்

கேள்வி: தமிழ்ஈழ லட்சியம் பற்றி உங்கள் பங்கு எவ்வளவு?

பதில்; தமிழ்மக்களின் இலட்சியத்தை அடைவதற்கு எனது முழுசக்தியையும் பயன்படுத்துவேன். அதுவே எனது நோக்கமாகும். எமது மறைந்ததலைவர்கள்விட்டுச்சென்ற பணியை தொடர்ந்து செயல்படுத்தி எமது இனம் சுபிட்சமடையபாடுபடுவதே அவர்களுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

கேள்வி: தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பிக்களில் இன்று நீங்கள் ஒருவர்தான் இளைஞராக எம். பி. பதவியில் இருக்கிறீர்கள் தீவிரவாத இளைஞர்களின் நிலைமை குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில்; ஜனநாயகத்திலும் சாத்விகத்திலும் நம்பிக்கை வைத்து ஆரம்பகாலம் தொட்டே எமது கட்சி இயங்கி வருகிறது. இருந்தும் நான் ஒரு கட்சியின் தலைமைப் பீடத்துக்கு கட்டுப்பட்டவன் என்பதால் இது குறித்து சொல்ல முடியாது. எனினும் இளைஞர்களது அவல நிலையை உணர்ந்து செயல்படுவேன்.

இருநாட்களாக ஓய்வில்லாமல் தொகுதியிலுள்ள ஆலயத்துக்குப் மக்களையும், மற்

(6-ம்பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

நிற்கமுடியுமென்றால் ஒருபோதும் நடவாதே;
இருக்க முடியுமென்றால் ஒருபோதும் நில்லாதே;
ஆனால் படுத்திருப்பதே எல்லாவற்றிலும் மிகநல்லது.
—சீனப்பழமொழி

# நமது நோக்கு

## கோதுமை உற்பத்தி

'மாவள்ளித்தோட்டத்தில் இருக்கும் தர்மாஸ்பத்திரி'; இதுவே இன்றைய யாழ். பெரியாஸ்பத்திரியின் பழைய பேர்.

ஒன்றுக்கும் வழியில்லாத கட்டத்தில் தர்மாஸ்பத்திரியைத் தஞ்சமாகக்கொண்ட நோயாளிகளை இனத்தவர் கூடப் போய்ப்பார்க்கத் துணியார்கள்; அத்துணை அவமானத்துக்குரிய செயல் அது.

நோயிலும் பார்க்கப் பெரியது 'சுயமரியாதை' என்றளவில், பணம் கொடுத்து சிகிச்சைபெறும் மருத்துவ மனைகளுக்கே மக்கள் செல்வது அந்தக் காலவழக்கம்.

மருத்துவத்தில் இந்த மரபென்றால், உணவுவகையிலும் அந்தகையதே!

நெல்லு ஒரு படி ஏழு சதம் (அன்றைய விலை) விற்ற காலத்தில் அதற்கும் வழியில்லாதவர்களே. பனையை நம்பிவாழ்ந்தனர்; எனவே கற்பக தருவிற்கு இந்த மோசம் நேர்ந்தது!

பனம்பழம், நுங்கு, பனாட்டு, பனங்கூழ், கிழங்கு ஒடியல் முதலிய உணவு வகைகள், மிகமிக வறியவர்களின் உணவுப் பொருட்கள். ஒரு நேரம் சோறு சாப்பிடுவதும், சிலர் அமாவாசை பறுவ காலங்களிலேயே சோற்றுணவு ரசிப்பதும் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் சர்வ சாதாரணமான காட்சி. பணம் படைத்தவர் ஒடியற்கூழ் ரசிப்பது வேறு பாங்குடையது.

இந்தியாவிலிருந்து மிக இலகுவாக இறக்குமதி செய்த நெல், வெங்காயம், மிளகாய், இவற்றின் உள்ளூர் உற்பத்திக்கு பெரும் தடையாயிருந்தன.

இரண்டாவது உலக யுத்தம் இந்த நாட்டுக்குப் பொதுவாகவும் யாழ்ப்பாணத்துக்குச் சிறப்பாகவும் நல்ல படிப்பினை வழங்கியது.

உணவுக்கப்பல் வரமுடியாத திண்டாட்ட நிலையில் 'உணவில் தன்னிறைவு' என்ற மந்திரம் சிவில் பாதுகாப்பு கமிஷனர் அமரர் எ. ஈ. குணதிலக்கா தொடக்கம் கிராம ரீதியில் உள்ள விதானையார் வரைக்கும் உச்சாடனம் பண்ணப்பட்டது இருந்தும் இலக்கு எட்டத்திலே காணப்பட்டது.

ஜனத்தொகை அதிகரிப்பு நெல்லின் பற்றாக்குறையை அதிகரித்தது. இதுபோன்ற கஷ்டங்கள் இப்பகுதி மக்களின் கண்களைத் திறக்க உதவின.

கோதுமைப்பாண், கடந்த காலத்தில் கிராமப்புறங்களில் வரவேற்புடைய தீன்பண்டமாகக் கருதப்படவில்லை.

வாரம் ஒரு அல்லது இரண்டு முறை தலையில் சுமந்து வரும் 'பேக்கரிமாமா' விடம் சீனி அப்பம் (Buns) பாண் போன்ற உணவுப்பொருட்கள் ஒரு பொழுது போக்கும் தீன்பண்டங்களாகக் கருதப்பட்டன.

இன்றுகோதுமைஉணவை ரசிக்காத குடும்பம் வடபகுதியில் இல்லை எனலாம்.

இங்கிலாந்தில் பாணும் பட்டரும் (Bread and Butter) இன்று ஒரு புதுமையற்ற உணவாகவிருக்கலாம்; யாழ்ப்பாணத்தினுடைய மேல் இடைத்தர குடும்பங்களின் மிக மதிப்பான உணவு இது.

எனவே தவிர்க்க முடியாததேவை. பல புதிய கண்டுபிடிப்புகளுக்குக் காரணமாகயிருப்பதை நாம் உணவு உற்பத்தியிலேயே காண்கின்றோம். அதனை செயற்படுத்துவதே உணவு அபிவிருத்தியின் ரகசியம்.

எவ்வாறு எங்கள் மாம்பழம், முருங்கை, வெங்காயம், மிளகாய் இன்று உருளைக்கிழங்கு - போன்ற உற்பத்திப் பொருட்கள் அகில இலங்கையிலும், ஏன் வெளிநாடுகளிலும் கூட— மதிப்பும் பெற்றிருக்கின்றனவோ அதேபோல் இன்று யாழ்ப்பாணத்தில் கோதுமை பெருமளவில் பயிர் செய்யலாமென்ற பரீட்சார்த்த முறையில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

''பொருளாதாரப் பூமி சாத்திர நூலைத் திருத்தி எழுத வேண்டிய அளவுக்கு வரண்ட பிரதேசம் எங்கும் கோதுமை அமோக விளைவைத் தந்துள்ளது. ஒரிடத்தில் பருத்தித்துறைபாராளுமன்றப் பிரதிநிதி அறுவடை செய்து வியப்புக்குள்ளானார் என்று மிக்கவற் செய்தி குறிப்பிட்டிருக்கிறது.

''தரிசாகக் கிடக்கும் காணிகளை பயனுள்ளவையாக மாற்றுவதற்கு வடபகுதி விவசாயிகள் கோதுமை உற்பத்தியில் நாட்டம் கொள்ளவேண்டும். கோதுமை உற்பத்தி மூலம் அதிக செலவு செய்யாமல் நல்ல பலனைப்பெற வழிஉண்டு''

இவ்வாறு மாவட்ட விவசாய உத்தியோகத்தர் திரு பரமானந்தம் கூறியிருக்கிறார்.

வரண்ட பூமியில் பருவகாலமழை பொய்க்கும் இக்காலத்தில் நாம் கூட்டாக புத்தம் புதிய வழிகளைப் பரீட்சார்த்தமாக கண்டு பிடிப்பதும் அதன் விளைவால் ஏற்படும் உணவுவகைகளுக்கேற்ப எங்கள் வாழ்க்கைமுறைகளை மாற்றியமைப்பதும் இன்றைய தட்டுப் பாட்டு நிலைமைக்குப் பொருத்தமான, தவிர்க்க முடியாத செயல்களாகும்.

மழையை வருவிக்காட்டு வளர்ச்சி எவ்வளவு அவசியமோ, அதேபோல் வரட்சி காலத்துக்குரிய பயிரினங்களில்கிந்தனையும் செயலாற்றலையும் செலவு செய்வது அவ்வளவு அவசியம்.

---

### மணியம்பதி
### சுப்பிரமணியசுவாமி
## கொடியேற்றம்

[கொக்குவில்]

கொக்குவில் மணியம்பதி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில் கொடியேற்ற உற்சவம் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் நடைபெறும். உற்சவத்தை பிரம்மஸ்ரீ கி. நாராயண குருக்கள் முன்னின்று நடத்தி வைப்பார். தேர்த் திருவிழா 28ம்திகதியும் தீர்த்தோற்சவம் 29ம் திகதியும் நடைபெறும்.

---

# 1981 நாட்டில் ஏற்பட்ட
# பொருளாதார வளர்ச்சிநிலை!

இலங்கையின் 1981ம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி [1970 மாறுவிலைகளில்] 4.1 வீதமாக மட்டுமே அமைந்திருந்தது. இது தாராளத்தன்மை கொண்ட இந்த அரசாங்கம் பதவியேற்றபின் அடைந்த ஆகக்குறைந்த வளர்ச்சியாகும். 1978இல் 8.8 வீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சிவேகம் இவ்வாண்டு அதன் அரைவாசியினைவிடக் குறைந்துவிட்டது. 1980கூட 5.6 வீத வளர்ச்சி காணப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். ஆனாலும் மொத்த உள்நாட்டுஉற்பத்தி தொடர்ந்தும் சென்ற ஆண்டுபோல் 5.8 வீதமாக காணப்படுகிறது. மொ. உ. உற்பத்தியில் முன்னேற்றம் இருந்தும் மொ. தே. உற்பத்திவேகம் குறைந்தமை தேறிய காரணி வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினையே பிரதிபலிக்கிறது. தேறிய காரணி வருமானம் 1980 முதல் எதிர்க்கணியப் போக்கினையே காட்டுகின்றது. அதிலும் 80 இல் 12 கோடியாக இருந்த தேறிய காரணி வெளிப்பாய்ச்சல் இவ்வாண்டு 45 கோடியாக உயர்ந்துவிட்டது. திறந்த பொருளாதாரத்தின் மூலம் மூலதனப்பாய்ச்சல் விரிவடைந்தமையினால் அவற்றின் வட்டி, பங்கிலாபங்கள் அதிகளவில் வெளியேறியமையே தேறிய காரணி வருமான வீழ்ச்சிக்கு காரணமாக அமைகிறது.

பொருளாதாரத்தின் துறைகளுக்கிடையான முக்கியத்துவத்தினை நோக்குமிடத்து குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டதாக தெரியவில்லை. வேளாண்மைத்துறை தமது பங்கினை சிறிதளவு உயர்த்தியுள்ளபோதும், கைத்தொழில் துறையில் எந்தவித அசைவும் தெரியவில்லை. மொ. தே. உற்பத்தியில் வேளாண்மைத் துறை 24.5 வீதமாக இருந்து 81 இல் 25.1 வீதமாகஉயர்ந்திருக்கிறது. கைத்தொழில் தொடர்ந்தும் 14 சதவீதத்துக்குள் தான் காணப்படுகிறது. சேவைகள், வங்கி காப்புறுதி, வர்த்தகம் போன்றன தமது பங்கினை ஓரளவு உயர்த்தி உள்ளபோதும் கட்டிட வாக்கம் வகித்த பங்கு பெருமளவு குறைந்துள்ளது.

உள்நாட்டு சேமிப்பு 80 இல் ஏற்பட்ட 744.3 கோடி ரூபாவுக்கு பதிலாக 81ல் 995 கோடியாக உயர்ந்துள்ளது. இது 33 வீத வளர்ச்சியென்றாலும், மொத்த தேசிய உற்பத்தியில் சேமிப்பின் பங்கு சென்ற ஆண்டினைவிட உயர்ந்தபோதும் 79ம் ஆண்டு 13.8 வீதத்துக்கு எதிராக 81-இல் 11.7 வீதமாகத்தான் காணப்பட்டது. எவ்வாறாயினும் உள்நாட்டு சேமிப்பில் மாற்றமில்லை என்பதே பெருமளவுக்கு உண்மையாகும்.

### வேளாண்மைத்துறை

விவசாயம், கடற்றொழில் காட்டுத்தொழில் என்பனவற்றினை உள்ளடக்கிய இத்துறை 1980ம் ஆண்டு 3·1 வீதம் வளர்ச்சிக்கு எதிராக 81இல் உற்பத்தியில் 6·9வீத வளர்ச்சியினை காட்டியது. குறிப்பாக தேயிலை, தெங்கு, நெல் உற்பத்திகளில் ஏற்பட்ட அதிகரித்த வெளியீடே இத்துறையின் உயர்ந்த வளர்ச்சிக்கு காரணமாகும். தேயிலை உற்பத்தி சராசரியாக 10வீத அதிகரிப்பினை காட்டியபோதும் 1979ம் ஆண்டு உற்பத்தியாகிய 206மில்லியன் கி. கி. என்பதிலிருந்து சிறிதளவு உயர்ந்து 210 மில்லியன் கி. கி. உற்விக்கவில்லையென்றே கருதப்படுகிறது. றப்பரின் உள்நாட்டு நுகர்வு இவ்வாண்டுமுதல் கணிசமான அளவு அதிகரித்தவேளை இத்துறையில் கூடியகவனம் எடுக்கவேண்டியது அவசியமென மத்தியவங்கி குறிப்பிடுகிறது. மற்றும் சிறுபயிர் உற்பத்திகளைப் பொறுத்தமட்டில் கணிசமான அளவு வளர்ச்சிகள் இவ்வாண்டு ஏற்பட்டிருக்கும்வேளை அவற்றின் ஏற்றுமதிகளும் ஓரளவு அதிகரித்திருக்கின்றன.

### நெல்

இலங்கையின் கிராமிய விவசாயமாகிய நெல் உற்பத்தி கடந்த வருடங்கள் போல் 1981-ம் ஆண்டும் உற்பத்தியில் அதிகரிப்பினை காட்டியுள்ளது. 1981 இல் மொத்தநெல் உற்பத்தி 22 இலட்சம் மெற்றிக் தொன்னாக (10 68 கோடி புசல்) காணப்பட்டது. 1980-ம் ஆண்டினைவிட 4.6 வீதம் உற்பத்தி அதிகரிக்கப்படும். அரிசிக்கு திறந்த சந்தைகளில் கிடைத்த உயர்ந்த விலை, அதிகரித்த நீர்ப்பாசன வசதிகள், சிறந்த இனநெல் பயன்படுத்தல் என்பனவை இத்துறையில் சில வருடமாக ஏற்பட்டுவரும் உற்பத்திப் பெருக்கத்துக்கு காரணமாகும் ஏக்கருக்கான விளைச்சல் அதிகரிப்பு, உற்பத்திப் பரப்பளவு அதிகரிப்பு என்ற இரண்டின் மூலமும் நெல் உற்பத்தி பெருகி வருகிறது. குறிப்பாக 81 இல் ஏக்கருக்கான விளைச்சல் சென்ற ஆண்டினை விட 1.6 புசல்களாக அதிகரித்திருக்க, 32000 ஹெக்டேயர் நிலம் புதிதாக நெல் உற்பத்தியில் சேர்க்கப்பட்டிருக்கிறது திறந்த பொருளாதாரத்தின் ஓரளவான சாதகம் நெல்உற்பத்தித் துறையில்தான் பிரதிபலித்திருக்கிறது எனலாம்.

இதற்கமைய இலங்கையில் நெல் இறக்குமதியும் இவ்வாண்டு குறைந்திருக்கிறது. அதாவது நெல் இறக்குமதி சென்ற ஆண்டு 3.1 லட்சம் மெற்றிக் தொன்னில் இருந்து இவ்வாண்டு 2.25 ல.மெற்றிக் தொன்னாக குறைவடைந்துள்ளது.

நெல் உற்பத்தியின் இத்தகைய அதிகரிப்புகள் பெரும்பாலும் பெரிய திட்டங்களைவிட சிறிய திட்டங்களின் மூலம்தான் பெறப்பட்டிருக்கிறது. மகாவலி போன்ற பாரிய திட்டங்கள் நடைமுறையில் இருக்கையில் இந்த ஒரு நிலைகாணப்படுதல் சிறப்பானதல்ல.

நெல்லுக்கு பயன் படுத்தப்பட்ட வளமாக்கிகள் இவ்வாண்டு 2000 மெற்றிக் தொன்களினால் வீழ்ச்சியடைந்திருந்தது. இது ஏறக்குறைய 15 வீத வீழ்ச்சியாகும். வளமாக்கிகளின் இக்குறைவுப் பாவனை உரங்களின் அதிகரித்த விலையின் விளைவாகும். 1981 இல்

(5-ம் பக்கம் பார்க்க)

(மத்தியவங்கி மீளாய்வு (1981) வெளியீட்டிலிருந்து தொகுத்து வழங்கியவர்; ஏ. பி. சூரியகாந்தன்)

---

# சமூகசேவையாளர்
## வீரகத்திப்பிள்ளையின் மறைவு

பிரபல சமூக சேவையாளரும், பத்திரிகை எழுத்தாளரும், சிநேகா சமூகஅபிவிருத்தி நிறுவனத்தின் அமைப்பாளருமான திரு. கதிரவேலு வீரகத்திப்பிள்ளையின் மறைவு பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

எழுத்துத் துறையிலேயே தனது தொழிலை நடத்திவந்த திரு. வீரகத்திப்பிள்ளை கலைவாணி அச்சகத்தில் கடமையாற்றியபோதே பத்திரிகைகளில் நிருபராகப் பணியாற்றியவர். இறுதிவரைபத்திரிகைத் தொழிலில் ஈடுபாடு கொண்டிருந்த இவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மாகாணச் செய்தி நிருபராகவும் பணியாற்றினார்.

சிநேகா சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் முக்கிய அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிவந்த திரு. வீரகத்திப்பிள்ளை பல பொது ஸ்தாபனங்களில் முக்கியபதவிகளைத் தாங்கிநின்று செயல்பட்டவர். காரைநகர் இன்று ஒரு சமூகசேவையாளனை இழந்துள்ளது. தோப்புக்காடு கிராமம் ஒரு தொண்டனை இழந்து தவிக்கிறது. பத்திரிகைஉலகம் ஒரு தரமான சமூக சேவை எழுத்தாளனை இழந்துள்ளது. சமூக அபிவிருத்தியில், கிராம முன்னேற்றங்களில் ஈடுபடும் அபிவிருத்தி விரும்புகின்ற சமூகசேவையாளர்கள் விசுவாசமான ஒரு நண்பனை இழந்து தவிக்கின்றனர்.

தனது வாழ்க்கையின்பெரும் பகுதியை சமூகப்பணிகளுக்குக் கொடுத்த திரு. வீரகத்திப்பிள்ளை தனக்கென இதுவரை எந்தப் புகழையும் தேடாதவர். கிராம முன்னேற்றமும், சமூக அபிவிருத்தியும், நாட்டின் முன்னேற்றமுமே இலட்சியமாகக்கொண்டு வாழ்ந்தவர் இவர், இவரது அமரத்துவத்தைக் கேட்டு சமூகசேவை உள்ளங்கள் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளன. கடந்த மாதம் சிநேகா சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் பனம் பொருள் உற்பத்திப் பயிற்சி நிலையம் ஒன்றை திறந்து வைத்த திரு. வீரகத்திப்பிள்ளையை அங்கு சந்தித்தேன் நேற்று அவர் மூளாய் ஆஸ்பத்திரியில் சுகயீன முற்றிருப்பதாக அறிந்து இன்று காலை ஆஸ்பத்திரியில் அவரைப் பார்க்கச் சென்றேன் ஆனால் அங்கு கிடைத்த

(5ம் பக்கம் பார்க்க)

## ரூ. 72 கோடி செலவில்
# வவுனியா - மன்னர் ஒருங்கிணைப்பு அபிவிருத்தி

(கொழும்பு)

வவுனியா, மன்னர் ஒருங்கிணைப்பு கிராம அபிவிருத்தித் திட்டத்துக்கு உலக வங்கியின் 12கோடி ரூபா நிதிஉதவி செலவிடப்படவுள்ளது இத்திட்டம் இவ்வாண்டு ஜூலை மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஐந்து வருட அபிவிருத்தித் திட்டமாக இது அமையும்.

இத் தகவலை போக்குவரத்து அமைச்சர் எம்.எச்.முஹமத் பாராளுமன்றத்தில் வெளியிட்டுள்ளார்.

பண்டிதர் கா.பொ.இரத்தினத்தின் வடக்குப் புறக்கணிக்கப்படுகிறது என்ற குற்றஞ்சாட்டுக்குப்பதிலளிக்கும் வகையில் அமைச்சரின் பேச்சு அமைந்தது.

விவசாயம், மீன்பிடித்துறை, வீதிகள் திருத்தம், மற்றும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் இதில் அடங்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். [இ]

# அகில இலங்கை ரீதியில் போட்டிகள்

(கொழும்பு)

இளைஞர் யுவதிகளிடையே மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணர்வதற்கும், அவர்களிடையே கலை, கலாச்சார துறைகளை வளர்ப்பதில் ஆர்வத்தையும், உற்சாகத்தையும், ஏற்படுத்தும்நோக்குடனும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் 17 — 19 வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு போட்டிகளை நடத்துவதற்கு முன்வந்துள்ளது.

பரத நாட்டியம், கிராமிய நடனம், கர்நாடகப் பாடல், கர்நாடக இசை, மிருதங்கம், தபேலா, ஹார்மோனியம் புதிய பாடல், நாடகம், நாவல், சிறுகதை, கட்டுரை, கவிதை, சிறந்த அறிவிப்பாளர் என்ற அடிப்படையில் பிரிவு, பிரிவாக போட்டிகள் நடத்தப்பட்டு வெகுமதியுள்ள பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் முத்திரை ஒட்டிய கவருடன் பணிப்பாளர்பதி, கலாச்சாரப் பிரிவு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், 10. டேவிட்சன் வீதி கொழும்பு-4, என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## கிணற்றுக்குப் பலி

(மாவிட்டபுரம்)

மதுபோதையில் கிணற்றில் தண்ணீர் அள்ளியவர் கிணற்றில் தவறி வீழ்ந்து மரணமானார்.

வசாவிளான் இடற்புலத்தை சேர்ந்த கணபதி வெள்ளையன் (53 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். இம்மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. மு. திருநாவுக்கரசு விசாரணை நடத்தினர். (க)

# 1981 நாட்டில் ஏற்பட்ட பொருளாதார...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இருமுறை அதிகரிக்கப்பட்ட உரங்களின் உரப்பாவனை குறைவுக்கு காரணமாகிறது. குறிப்பாக 1979-81 காலப் பகுதியில் உரங்கள் 3 மடங்காக அதிகரித்தமை இதன் தாக்கத்தின் மேலும் பெரிதுபடுத்துகிறது. எவ்வாறாயினும் உரங்களின் அதிகரித்து வரும் விலை காரணமாக அடுத்து வரும் ஆண்டுளிலும் நெல் உற்பத்தியில் தேக்கம் ஏற்படலாமென்றே கருதப்படுகிறது. இவற்றுடன் கூலி உயர்வு, எண்ணெய் விலை உயர்வினால் இயந்திரங்களில் ஏற்பட்ட உயர்ந்த செலவுகள் என்பனவே நெற் உற்பத்திக்கு தற்போது தடையாக அமைகின்றன. எனவே அரசாங்கம் உரமான்யம்வழங்குதல் இப்பொருட்களின் விலையினை குறைத்தல், கடன்வசதி செய்தல் போன்ற நடவடிக்கைகளில் இறங்கும்போது தற்போது முன்னேறி வரும் நெல் உற்பத் மேலும் முன்னேற வழியேற்றப்படலாம்.

### கடற்றொழில்

கடற்றொழில் துறைக்கு அரசாங்கம் வழங்கிய பலவித சலுகைகள் இத்துறை வழர்ச்சியடைய ஒரு முக்கிய காரணியாகும். 81ல் மீன் பிடி உற்பத்திகள் 10வீதம் அதிகரிப்பினை பதிவு செய்தன. எரிபொருள் விலைகாரணமாக ஆழ்கடல்மீன்பிடி சிறிதளவு அதிகரிப்பினை காட்டியிருக்க கரையோர மீன்பிடியே கூடிய உற்பத்தியினை காட்டியிருந்தது எவ்வாறாயினும் எமது கடல் வளம் இன்னமும் முழுமையாக பயன்படுத்தப்படவில்லை என்பதே இதன் பொருளாகும். இதே போல் முட்டை, பால் உற்பத்தி தற்காலிக தரவுகளின் படி சிறிதளவு அதிகரிப்பினைகாட்டியுள்ளன. கால்நடை அபிவிருத்திக்கு அரசாங்கம் பல திட்டங்களை வகுத்திருந்தும் தகுந்த அமைப்பின்மையில் இத்துறை துரித முன்னேற்றம் பெற தடையாக அமைகிறது.

### கைத்தொழில்

தாராளப் பொருளாதாரக் கொள்கையின் விளைவுகள் உள்ளூர் கைத்தொழில்துறைக்கு பாதகமாகவே அமைந்திருந்தன. குறிப்பாக கட்டற்ற இறக்குமதியினால் அதிகளவு கைத்தொழில் பொருள்கள் பெருமளவில் உள்நாட்டினை வந்தடைந்திருந்தது. இவை இலங்கையுடன் ஒப்பிடும் இடத்து தரத்தில் கூடியவை மாத்திரமன்றி விலையிலும் குறைவாக காணப்பட்டன. இக்காரணங்களினால் உள்நாட்டில் குவிந்த கைத்தொழில் பொருள்களுடன் போட்டியிட்டு சிறந்த சந்தை வாய்ப்பினை பெறும் நிலை இலங்கை கைத்தொழில் பொருள்களுக்குஇருக்கவில்லை. இதனால் உற்பத்திக்குறைவு, குறைந்த வேலைவாய்ப்பு என்பன இத்துறையில் பெருமளவு ஏற்பட்டிருந்தது. இக்காரணிகளினால் தாராளக்கொள்கை அமுல் நடத்தியகாலத்திலிருந்து இன்றுவரை பல சிறிய, நடுத்தர குடிசைக்கைத்தொழில்; சிறுகைத்தொழில் நிலையங்கள் மூடப்படுதல், அரச கைத்தொழில்கூட்டுத்தாபனங்கள் நிதி நெருக்கடியினை அனுபவித்தல் என்பன பொதுவான பண்புகளாக காணப்பட்டன. இவ்வாண்டும் இத்தகைய ஒரு நிலைதான் காணப்பட்டது தாராள பொருளாதாரக் கொள்கை மூலம் வெளிநாட்டு தொழில் நுட்பங்களை எமதுகைத்தொழில் சிறப்பாக பயன்படுத்தி முன்னேறும்என்றஎதிர்பார்ப்பு பலிக்கவில்லை. மாறாக கைத்தொழில் அழிவடையத்தான் வழிவகுத்தது. கைத்தொழில் துறையில் ஏற்பட்ட இவ்வாறான நெருக்கடியினை நீக்குவதற்கு பொருளாதார ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி மத்திய வங்கி கேட்டிருந்தும் இதுவரை உருப்படியான நடவடிக்கைகள் எடுத்ததாக தெரியவில்லை.

மாறாக ஏற்றுமதி சார் கைத்தொழில்கள் சுதந்திர வர்த்தக வலயத்தினால் பெருமளவு விரிவாக்கம் பெற்றிருந்தது. இவற்றின் உற்பத்தி ஏற்றுமதி அதிகரிப்பு என்பன குறிப்பிடக்கூடியளவுக்கு சிறப்பாக காணப்பட்டன. இருப்பினும் இதனால் ஏற்படும் மேலதிக நன்மைகள் சுதந்திர வர்த்தக வலயம் ஊடாக வெளியே செல்வதும் முக்கியஅம்சமாகும்.

உண்மை நியதியில் உற்பத்திக் கைத்தொழிலின் வெளியீடு 1980 ஆண்டு 6 வீத வளர்ச்சிக்கு எதிராக 1981இல் 2 வீத வளர்ச்சியினைத் தான் காட்டியது. 1977இன் பின் ஏற்பட்ட ஆகக்குறைந்த வளர்சி வீதம் இதுவாகும். இக்குறைவு வளர்ச்சி பெற்றோலியப்பொருள்களின் உற்பத்தியில் ஏற்பட்ட 5 வீதம் வீழ்ச்சியினால்ஏற்பட்டதாகும். தோல், ஆடைகள் காகிதம், கனிப்பொருள் உற்பத்திகள் அதிகரிப்பினை காட்டயவேளை உலோக உற்பத்திகள், மர உற்பத்திகள், பெற்றோலியம் என்பன உற்பத்தியில் வீழ்ச்சியினை பதிவு செய்தன. தாராளப் பொருளாதாரக்கொள்கை. மின் துண்டிப்பு என்பன கைத்தொழில் துறையின் இவ்வாண்டு வீழ்ச்சிக்கு பொறுப்பாக இருந்தன.

அரச துறைக் கைத்தொழிலும் 1980-ம் ஆண்டு 8% வளர்ச்சிக்கு எதிராக 81ல் 1 வீத வீழ்ச்சியினை காட்டியது. இவ் வீழ்ச்சி சபுஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இவ்வாண்டு திருத்த வேலைகளுக்காக மூடப்பட்டமையினால் ஏற்பட்டதாகும். கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் பல தொடர்ந்தும் நட்டத்திலேயே இயங்கி வந்தன. இருப்பினும் தேசியபுடவைக்கூட்டுத்தாபனம், சிமெந்து, கடதாசிக் கூட்டுத்தாபனங்கள் சிறிதளவு திருந்தியிருக்கின்றன.

வெளிநாட்டு உள்நாட்டு முதலீட்டினை அதிகரிக்கவும் ஏற்றுமதியினைப் பெருக்கி புதிய தொழில் வாய்ப்புக்களை பெருக்கவும் தொடக்கப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் தனது நடவடிக்கைகளை விரைவு படுத்தி வருகிறது. இதற்கு பொறுப்பான கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு 1981-ல் அங்கிகரித்த 48 திட்டங்களுக்கு எதிராக இவ்வருடம் 18 செயற்திட்டங்களைத் தான் அங்கிகரித்தது. இவற்றில் 41 திட்டங்கள் உற்பத்தியில் முழுமையாக ஈடுபட்டிருந்தன 1981-இல் இவ்வலயத்தில் 76.1 கோடி ரூபா மூலதனமும் 19921 பேர் வேலை வாய்ப்பும் பெற்றிருந்தன இச் செயற்திட்டங்களில் பெரும் பாலனவை வெளிநாடுகளினுடையதாகும் மேற் ஐரோப்பிய நாடுகள் இதில் பெரும் பங்கு கொண்டன. கொழும்பு பெரும்பாக ஆணைக்குழுவின் ஏற்றுமதிகள் 1980 - ம் ஆண்டு 52.4 கோடி ரூபாவுக்கு எதிராக 1981 இல் ஏறக்குறைய 111 கோடி ரூபாவாக அதிகரித்தது. ஆடைகள் 90 பங்கினை வகித்தன எனினும் மின் அணுக்கருவிகளின் உற்பத்தி தொடர்ந்தும் சிறிய மட்டத்தில் தான் இருந்தது.

மேலும் பாரிய பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு இரண்டாவது ஊக்குவிப்பு வலயமாக "பியகமை" யினை அபிவிருத்தி செய்யவும் கருதியுள்ளது. எவ்வாறாயினும் முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் ஆடைகளில் மாத்திரம் தங்கியிருத்தல் எதிர்கால அதன் வளர்ச்சி போதியதாக இல்லை என்பதுடன் அணுமின் கருவிகளின் உற்பத்தியினை அதிகரிப்பதில்தான் அதன் நடமுறை ரீதியான வெற்றியும் தங்கியுள்ளது.

முழுமையாக நோக்குமிடத்து உள்ளூர் கைத்தொழில்துறை வளர்ச்சிக்கு அதிகரித்த இறக்குமதி பெரிதும் தடையாக இருப்பதினால் அவற்றில் ஏதாவது சீர்திருத்தம் செய்யும் போது தான் இத்துறை தனது வளர்ச்சியினை தொடர முடியும்.

# ரூப வாஹினியில் இன்று

மாலை 6-00 இன்றைய நிகழ்ச்சிகள், 6-01 சிறுவர் இசை நிகழ்ச்சி (சிங்களம்) 6-15 'கார்ட்டூன்' சித்திரம். 6-30 இளைஞர் விவகாரம் பற்றிய நிகழ்ச்சி (சிங்களம்). 7-00 செய்திமஞ்சரி (தமிழ்), 7-14 நாளைய நிகழ்ச்சிகள், 7-15 புரூஸ்லி நடித்த கிறீன் ஹொனர்ட்" (ஆங்கிலம்). 7-45 சிங்களநிகழ்ச்சி 8-15 செய்திமஞ்சரி (சிங்களம்), 8-55 திரைப்படம் (சிங்களம்). 9-50 செய்திமஞ்சரி (ஆங்கிலம்), 9-45 திரைப்பட தொடர்ச்சி, 11-30 நிகழ்ச்சிகள் முடிவு.

சமூக...


(4-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்திபோலே வேறு வீடு நோக்கி ஓடினேன். அங்கு காட்சிகள் நெஞ்சை உருக்கின. அவரது பத்னி, ஒரேயொரு புத்திரி சுற்றவர சமூக சேவையாளர்கள். தோப்புக்காடே சோகமயம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவன் அருள் புரிவாராக.

சி. பாலசிங்கம்
தலைவர்,
மறுமலர்ச்சி இயக்கம்
மண்டைதீவு


## மீண்டும் கிடைக்கின்றது




### ஜப்பானிய பம்ப் தொழில் நுட்பமும் அமெரிக்க என்ஜினும்.

"டெர்க்காய்" தன்இயக்க விவசாய நீர் இறைக்கும் இயந்திரம் "பிறிக்ஸ் & ஸ்ரற்றன்" என்ஜினுடன் இணைக்கப்பட்டு இப்போது ரூ. 5200/-க்கு கிடைக்கின்றது.

- ★ நீர் இறைக்கும் அளவு மணிக்கு 27000 லீட்டர் (6000 கலன்)
- ✱ மண்ணெண்ணை கொள்வனவு மணிக்கு 0.75 லீட்டர் (0.16 கலன்)
- ✱ மொத்த நிறை 28 கிலோ (61 றுத்தல்)
- ✱ ஒரு வருட உத்தரவாதமும் நாடெங்கிலும் உதிரிப்பாகங்களும் கிடைக்கும்.

பொறியியல் விற்பனை, சேவைப் பிரிவு
**ஹேலீஸ் லிமிட்டெட்**
25, ஃபொஸ்டர் ஒழுங்கை கொழும்பு 10. தொலைபேசி 91181

யாழ். மாவட்ட ஏக விற்பனையாளர் :
**கல்யாணி ஸ்ரோர்ஸ்** 31, நியூ மார்க்கட், சுன்னாகம்.

Mal Ads

# "இளந் தலைமுறையினருக்கு திருமுறைப் போதனை வேண்டும்"

-சுப்பிர முனியர்

(பண்டத்தரிப்பு)

ஸ்ரீசிவாய சுப்பிரமுனிய சுவாமிகளுக்குக் காரைநகர் கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. கல்லூரிஅதிபர் திரு. ஏ. கே. சர்மா தலைமையில் நடைபெற்ற இவ்வரவேற்பு உபசாரத்தில் ஸ்ரீசுப்பிரமுனிய சுவாமிகள் அருளுரை நிகழ்த்துகையில், சைவ நாயன்மார்கள் அருளிச்செய்த திருமுறைகள் எமக்குக்கிடைத்த அரும் பொக்கிஷங்கள் என்றும், அவற்றைப் பேணிப்பாதுகாத்து எமது இளம் சந்ததியினருக்குப் போதிப்பதற்கு ஆசிரிய சமுதாயம் முன்வரவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

சைவமணி வித்துவான் மு. சபாரத்தினம், திருமதி பூரணம் ஏகாதிநாதன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

காரைநகர் ஈழத்துச்சிதம்பர சிவன் கோவிலுக்கும் சென்று ஸ்ரீசுப்பிரமுனிய சுவாமிகள் வழிபட்டார். காரைநகர் சிவாச்சிரமத்திலும் திருமதி க நடராசா தலைமையில் சுவாமிகளுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. இராப்போசன விருந்தும் நடைபெற்றது. (அ)

## பதவி உயர்வு

(பண்டத்தரிப்பு)

காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலய அதிபர் திரு. செ. தேவதாசன் முதலாம்தர அதிபராகக் கல்விச் சேவைகள் அமைச்சினால் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இதனையொட்டி மேற்படி வித்தியாலயப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பாராட்டுவிழாவொன்றை நடத்தியது. [அ]

## கருத்தரங்கு

(நீர்வேலி)

வலி கிழக்குத் தென்பகுதி சமநலசேவை நிலையத்தின் சார்பில் அப்பகுதியிலுள்ள சிறுப்பிட்டி, கோப்பாய், நீர்வேலி, அச்செழு, ஊரெழு, உரும்பராய் ஆகிய கிராமங்களின் விவசாயிகளின் நலன் கருதி, நிலையத்தலைவர் திரு. செ. ஐயாத்துரை தலைமையில் கிராமரீதியாக இம்மாதம் 20ந் திகதியிலிருந்து விவசாயிகள் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை பெரும்பாக உத்தியோகஸ்தர் செல்வி ஜெயலட்சுமி முருகேசம்பிள்ளை மேற்கொண்டு வருகின்றார். [அ]

# கேதீச்சரத்தில் துவஷ்டா மணிமண்டபம்

## பூர்வாங்க வேலைகள் ஆரம்பம்

[நீர்வேலி]

திருக்கேதீஸ்வரப் பகுதியில் இராசதானி அமைத்து அரசாட்சிசெய்து வந்தவரும், அப்பகுதியில் ஆலயம் அமைத்து லிங்கவழிபாடு செய்துவந்தவருமான துவஷ்டாமன்னரின் ஞாபகார்த்தமாக அங்கு ஓர் மணிமண்டபம் அமைக்கும் பணியில் அகில இலங்கை விஸ்வகர்மகுலசங்கம் ஈடுபட்டு உருகின்றது.

சமார் ஏழு லட்ச ரூபா செலவில் அமையவிருக்கும் இம்மண்டபத்துக்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாகிவிட்டன.

மண்டபத்திற்கு நிதிஉதவி தேடி பொதுமக்களிடம் சங்கம் செல்லவேண்டுமென அமைப்புச் செயலாளர் திரு. த. பரராசசிங்கம் கோரியுள்ளார். [அ]




"மானிப்பாய் ப. நோ. கூ. சங்கம்

# துரித முன்னேற்றம்

(மானிப்பாய்)

"எமது சங்கம் துரிதமாக முன்னேற்றமடைந்து வருகிறது. வியாபார நடவடிக்கைகளை விரிவுபடுத்திவருகிறது. பணியாளர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது"

இவ்வாறு மானிப்பாய் கோவில்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்க விசேட பொதுச் சபைக் கூட்டத்தில் சங்கத்தின் தலைவர் திரு. எஸ். தர்மசீலன் குறிப்பிட்டார்.

சங்கத்திற்கு மேலும் 2,000 கதிரைகள் வாங்குவதற்கும், புதிய வான் வாங்குவதற்கும் புதிய வான் வாங்குவதற்கும் சங்கத்தின் அச்சகத்துக்கு புதிய பிளேற்றின் மெஷின் வாங்குவதற்கும் பொதுச்சபை அங்கீகாரம் வழங்கியது.

## உற்சவம்

[பண்டத்தரிப்பு]

மாதகல்பாணாவெட்டி அருள்மிகு புவனேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 17ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று இம்மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக் கிழமை தேர் உற்சவமும், மறுதினம் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன.

## "இன்னொரு ஒப்பந்தம்கூட ஏற்படலாம்"

[வண்ணார்பண்ணை]

"இலங்கையில் இன்னுமொரு ஒப்பந்தம் உருவாகும் நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. "பண்டா—செல்வா ஒப்பந்தம்" "டட்லி—செல்வா ஒப்பந்தம்" என்ற பெயர்கள் உருவாகியது போல "ஜயவர்த்தன — அமிர்தலிங்கம்" ஒப்பந்தம் என்ற பெயர் அடிபடவேண்டுமென்ற ஆசையும் எண்ணமும் பலரிடம் காணப்படுவதைக் காணமுடிகிறது"

இவ்வாறு தமிழர் சுயாட்சிக் கழகத்தின் தலைவரும் முன்னாள் எம். பியுமான திரு. வ. நவரத்தினம், லண்டனில் இருந்து வெளியாகும் "தமிழ் டைம்ஸ்" என்ற பத்திரிகைக்கு கருத்துத் தெரிவித்திருக்கிறார். திரு. நவரத்தினம் இப்போது அமெரிக்காவில் இருக்கிறார்.

## வட்டு. கிழக்கு கிராமோதயசபைத் தலைவர்



சித்தன்கேணி கலைநகரைச் சேர்ந்தவரும், வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாசாலை கனிட்ட அதிபரும் சித்தன்கேணி சிவச்செல்வி இந்துசமய மன்றத் தலைவரும், எழுத்தாளரும், ஓவியக் கலைஞரும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளருமான சைவப் புலவர் நா. க. தங்கரத்தினம் (நகுலன்) வட்டுக்கோட்டை கிழக்குக் கிராமோதயசபைத் தலைவராக மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் தேர்தலில் போட்டியிட்டு அதிகப்படியான வாக்குகளைப் பெற்று கிராமோதயசபைத் தலைவராக தெரிவுசெய்யப்பட்ட இவர் இவ்வாண்டு போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## காங்கேசன் நபர் வலையுடன் மன்னாரில் கைது

[மன்னார்]

பேசாலையில் திருடிய மூவாயிரம்ரூபா பெறுமதியான மீன்பிடி வலையை பஸ்ஸில் கடத்திச் சென்ற நபர் ஒருவர் பொலிசாரிடம் ஒப்படைக்கப் பட்டார்.

காங்கேசன்துறைப் பகுதியைச் சேர்ந்த பி பொன்னுத்துரை என்பவரே கடந்த ஞாயிற்றுக் கிழமை சந்தேகத்தின் பேரில் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட சந்தேக நபராவார்.

பேசாலையில் திருடிய மீன்பிடிவலையை பொதியாகக்கட்டி பஸ்ஸில் கடத்திச் சென்ற போது சந்தேகம்கொண்ட பஸ் கண்டக்டர் அவரைப் பொலிசாரிடம் ஒப்படைத்தார். அப்போது வலைத்திருட்டும் அம்பலமாகியது.

சந்தேக நபரை மன்னார் பொலிசார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது மறுவிசாரணை வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் உத்தரவிட்டார். [கி]

குடும்பநலம்

## இரு கிராமங்கள் தெரிவு

(கரவெட்டி)

குடும்பநலத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கென கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கரணவாய் தெற்கு கிராமமும், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொலிகண்டி கிராமமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

குடும்பநலத் திட்டச் சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்ட இவ்விரு கிராமங்களைச் சேர்ந்த தொண்டர்களுக்கும் அண்மையில் குடும்பநலத் திட்டம் சம்பந்தமான பயிற்சி வகுப்பு நடாத்தப்பட்டது.

பொலிகண்டியில் நடந்த இப்பயிற்சி வகுப்பை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ ஐயாத்துரை ஆரம்பித்து வைத்தார். பயிற்சி வகுப்பில் 40 தொண்டர்கள் கலந்துகொண்டனர்.

## மாவட்ட...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரும் தலைவர்கள், பிரமுகர்கள் அன்பர்கள் ஆகியோரையும் சந்தித்து அளவளாவி அவர்களின்வரவேற்பு உபசாரங்களில் பங்குபற்றி அன்புத் தொல்லைகளால் களைப்படைந்த கலாநிதி நீலன் திருச்செல்வம் சற்றுநேரம் கூட ஓய்வெடுக்காமல் இப்பேட்டிக்கு சிறிது நேரம் ஒதுக்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.


மேலும் பல கேள்விகள் கேட்க இருந்த போதிலும் அவர் கொழும்பு செல்லவேண்டியிருந்ததால் விடைபெற்றுக் கொண்டு திரும்பினேன்.

இச்சந்திப்போது எம். பி. யின் தொகுதிச் செயலாளர் திரு. நாக. பத்மநாதன், சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தலைவர் திரு. இ. விஜயரத்தினம் ஆகியோரும் இருந்தனர். (மா)

# நாளை ஆரம்பமாகும் சென்.பற்றிக்ஸ்-யாழ்ப்பாணக் கல்லூரி 66-வது மாபெரும் கிரிக்கெட்போட்டி

(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, வருடாந்தக் கிரிக்கெட் போட்டி, நாளை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றின் 66-வது நடைபெறுகிறது.

இதுவரை காலமும், நடைபெற்று முடிந்த இக்கிரிக்கெட் போட்டியில், சென். பற்றிக்ஸ் கல்லூரி 23 தடவையும், யாழ்ப்பாணக் கல்லூரி 15 தடவையும் வெற்றி பெற்றுள்ளன. மற்றையப் போட்டிகள் அனைத்தும் வெற்றி-தோல்வியின்றி முடிவுற்றுள்ளன.



சென். பற்றிக்ஸ் கல்லூரி கோஷ்டியினர்

## சென். பற்றிக்ஸ் வீரர் விபரம்


சென். பற்றிக்ஸ் கல்லூரி இவ்வருடம் கலந்து கொண்ட போட்டிகள் அனைத்திலும் தோல்வியடையாது முன்னணி வகிப்பது குறிப்பிடத் தக்கது.

காப்டன் எஸ். எல். பி. டக் மலானியஸ்: இவர் டியின் காப்டன். கிரிக்கெட் ஆட்டத்தில் மூன்று வருட அனுபவம் உடையவர், வேகமாக ஓட்டங்களை எடுப்பதிலும், வேகமாக பந்து வீசுவதிலும் சிறந்தவர். மைதானத்தில் எப்பகுதியிலும் நின்று பந்து தடுப்பதில் மிகமிக வல்லவர். 50 விக்கெட்டுகளை வீழ்த்தி ஒரு சாதனையை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. இக்கோஷ்டி வேகமாகத் துடுப்பெடுத்தாடுவதில் வல்லவர்.

எஸ். நவநீதராசஜா: இவர் இக் கோஷ்டியில் உப-காப்டனாக விளங்குகின்றார். கிரிக்கெட் ஆட்டத்தில் இரண்டு வருட அனுபவம் உடையவர். இக்கோஷ்டியின் ஆரம்ப அதிவேகப் பந்துவீச்சு வீரராக விழங்கும் இவர் கடந்த வருகரன், ஜி. எஸ். மரியதாஸன், ஏ. டி. ஆனந்தராசா, பி. எல். விஜயரட்ணம், சி. ஆர். பேரல், ரி. டி. பிறேமநாயகம், வி. ஞானசீலன், எஸ். டபிள்யூ. கி ஸி லி, எஸ். குமாரசெல்வன்.

மற்றைய வீரர்களின் பெயர்கள் வருமாறு: டி. ஆனந்தராசா, பி. எஸ். எம். அரியராசா, ஏ. ஈ. அந்தோனிப்பிள்ளை, எஸ் ஐ. ஜே. பால்

## விளையாட்டுநிருபர் 'தேவா'



யாழ்ப்பாணக் கல்லூரி கோஷ்டியினர்

## யாழ்ப்பாணக் கல்லூரி கோஷ்டி வீரர் விபரம்

பி. கணேசன்: இவர்தான் இக்கோஷ்டியின் காப்டன். கிரிக்கெட் ஆட்டத்தில் நாலு வருட அனுபவம் உடையவர். ஆரம்ப துடுப்படி வீரரான இவர், சிறப்பாக பந்து தடுப்பதிலும் வல்லவர்.

கே. ஞானசும்பிரமணியம்: இவர் இக்கோஷ்டியின் உப-காப்டன். கிரிக்கெட் ஆட்டத்தில் நாலுவருட அனுபவம் உடையவர். கடந்த வருடம் யாழ்ப்பாண பாடசாலைத் தெரிவுக் கோஷ்டியில் அங்கம் வகித்தவர். ஆரம்ப பந்து வீச்சு வீரரான இவர், சிறப்பாக துடுப்பெடுத்தாடுவதிலும் வல்லவர்.

மற்றைய வீரர்களின் பெயர் விபரம் வருமாறு: கே. சிவதாஸ், பி. ரட்ணராஜ், எஸ். ஜெயக்குமார், பி. எல். மோகனகுமார், ஜி. எல். குணரட்ணம், ஜி. எல். குணத்திலகன், எம். பாலச்சந்திரன், எம். பரமலிங்கம், கே. முரளிதரன், ஜே. ஜெயராசா, டி. பாலசங்கர், எஸ். அஸ்ரீன்.

## ஆட்ட நேரம்

இப்போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி 6 மணிக்கு முடிவடையும். சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 5-30-க்கு முடிவடையும்.

(வி)

## சைக்கிள் வீரர் கப்பலில் பயணம்

(மன்னார்)

சைக்கிளில் இலங்கையில் சுற்றுலாவை மேற்கொண்ட கல்கத்தாவைச் சேர்ந்த அசோக் குமார்பால் (வயது 23) கடந்த சனிக்கிழமை தலைமன்னார் கப்பல் மார்க்கமாக இந்தியாவுக்குப் பயணமானார்.

இலங்கையில் 13நாட்கள் தங்கியிருந்த இவர் கண்டி, அனுராதபுரம், மன்னார் யாழ்ப்பாணம், நுவரெலியா, நீர்கொழும்பு, புத்தளம், குருநாகல் ஆகிய இடங்களுக்கு சைக்கிளில் சுற்றுலாவை மேற்கொண்டிருந்தார்.

(க)

மனோகரா (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி
கப்பலோட்டிய தமிழன்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 5 காட்சிகள்
BLIND RACE
(Action- Thrill)

றீகல் (யாழ். நகர்) 16-17 Only
Daily 5 Shows
TERENCE HILL-
BUD SPENCER in
"ODDS AND EVENS,"
(Color)
Comedy & Fights

வெஸ்லி (காங்கேசன்துறை)
தினசரி- 4-15, 7-00
சனி. ஞாயிறு 1-3
சிவாஜி - உஷாநந்தினி
என்னைப்போல் ஒருவன்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
என் அண்ணன்

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனி — சௌகார்ஜானகி
துணைவன்

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, சரிதா, ஜெய்சங்கர் நடித்த
கீழ்வானம் சிவக்கும்
(கலர்)

குறிப்பிட்ட தினங்கள் மட்டும்
ராஜா (யாழ்- நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
கர்ணன் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி (சினிமாஸ்கோப்)
எமது அடுத்த வெளியீடு
துணிவே துணை

ராணி (யாழ். நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
எம். ஜீ. ஆர். - ஜெயலலிதா
தேடிவந்த மாப்பிள்ளை
(புதிய பிரதி)

சாந்தி (யாழ். நகர்) 10-30, 2-30, 4-45, 7-00, 9-30. போன்: 23642
கடைசித்தினம் 18-3-83
WALT DISNEY'S PRESENTS...
SNOW WHITE AND SEVEN DWARFS
FAMILY ENTERTAINMENT - TECHNICOLOUR
Parents! This is your good chance to give your, kids the finest movie treat ever!
SCHOOLS, AT CONCESSION RATES

தென்னிந்திய ரசிகர்கள் 100 நாட்களுக்கு மேல் கண்டு களித்த தீந்தமிழ் திரையோவியம்!
வின்ஸர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-சரிதா- சில்க் சுமிதா-சுருளிராஜன் மற்றும் பலர் நடித்த
வண்டிச்சக்கரம்
(வண்ணக் கலர்)
"சரிதா" இப்படத்தில் நடித்ததன்மூலம் சிறந்த நடிகைக்கான ஜனாதிபதி விருதுபெற்றமை குறிப்பிடத் தக்கது.

# உபாலி மறைவினால் சிலருக்கு மகிழ்ச்சி!

-அனுரா

(கொழும்பு)

''உபாலி மறைவுக்கான காரணத்தையும். அதன் பின்னணியையும் ஆராயவேண்டும் இதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது பூரண ஒத்துழைப்பையும் வழங்கும்''

இவ்வாறு திரு. அனுரா பண்டாரநாயக்கா 'பட்ஜட்' விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''கடந்த 'பட்ஜட்' விவாதத்தின்போது. உபாலியின் பெயர் இங்கு மிகவும் தாராளமாக பலர் வாயிலும் அடிபட்டன. சிலர் மிகவன்மையாக அவரைக் கண்டித்தார்கள். இன்று சபையில் சகலரும் அவர் மறைவுக்காக வேதனைப்படுகிறார்கள்.

''அரசியல் ரீதியாக உபாலியை நிதிஅமைச்சர் கண்டித்தார். ஆயினும், அவர் மறைவு குறித்து கவலை தெரிவித்தார்.

''அரசியல் ரீதியாகவும், வர்த்தக ரீதியாகவும் உபாலிக்கு எதிரிகள் இருக்கிறார்கள். அவர் காணாமல்போனது, சிலருக்கு மகிழ்ச்சியைக்கூட அளிக்கலாம்.

''உபாலி மர்மமறைவைக் கண்டுபிடிக்க, விசாரணை செய்யவேண்டும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

## நிர்வாக சபை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் திரு. ஆர். வைரலிங்கம் முன்னாள் உலக வங்கி ஆலோசகர் திரு. ஆர். செல்லப்பா ஆகியோரே புதியதாக நியமிக்கப்பட்டவர்களாவர்,

9 பேர் கொண்ட நிர்வாக சபையில் நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் 5 பேரைத் தெரிவுசெய்வார்கள்.

## புலிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூது ஆறு வருடங்கள் முடிந்துவிட்டன. தமிழ் மக்கள் பிரச்னைகளைத் தீர்த்துவைக்க இந்த ஆறு வருடங்களில் என்னசெய்துள்ளீர்கள்'' என்று கேட்டார்.

அவர் மேலும் பேசும்போது குறிப்பிட்டதாவது:-

''தமிழ்ப்பிரதேசங்களை அபிவிருத்தி கல்வி போன்ற துறைகளில் புறக்கணித்து வருகிறீர்கள் எமது தமிழ் இளைஞர்களை புலிகள், பயங்கரவாதிகள் என்று குறிப்பிடுகின்றீர்கள். அவர்கள் பயங்கரவாதிகள் அல்ல அவர்கள் விடுதலைப் போராளிகள். நாம் பிரிவினை கோரவில்லை. ஒரு வீட்டில் அண்ணன் தம்பி என்றிருந்தால் - அவர்கள் திருமணமாகி குழந்தைகளெல்லாம் வந்தபின் பிரச்னைகள் தோன்றிவிடுகின்றன. அதனால் அவர்கள் தனித்து வாழ்வதே சிறந்தது. சிங்களவரும் நாமும் அண்ணன் தம்பிகள்தான். எங்களுக்குள் பல பிரச்னைகள் தோன்றிவிட்டன. நீங்கள் வீட்டை வைத்துக்கொள்ளுங்கள். எங்களுக்குச் சிறுதுண்டு நிலத்தைத் தாருங்கள். நாங்கள் குடிசை அமைத்துக் கொண்டு நிம்மதியாக வாழ்கிறோம். மலேஷியாவுக்கும் சிங்கப்பூருக்குமிடையில் இப்படியான ஒருநிலைதான் முன்பு நிலவியது இப்போது பிரிவினையின்பின் அவர்கள் பிரச்னையின்றி வாழ்கிறார்கள்'' [இ]

## கிராமோதயசபைத் தலைவராக தெரிவு

[யாழ்ப்பாணம்]

நாவாந்துறைப் பகுதிக்கான கிராமோதய சபைத் தலைவராக திரு. செல்லப்பா தனராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை மண்டபத்தில் விசேட சேவை அலுவலர் திரு. ம. சுந்தரலிங்கம் தலைமையில் தேர்தல் நடைபெற்றது. கொட்டடி மீனாட்சி சனசமூக நிலையத் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தொண்டருமான திரு. தனராசா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

## இன்றும் நாளையும் கைத்தொழில் கண்காட்சி

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நிறுவனத்தில் இன்றும் நாளையும் பொறியியல் தொழில்நுட்பம் சம்பந்தமான செய்முறைப் பயிற்சிகள் நடைபெறவுள்ளன. குடாநாட்டிலுள்ள கைத்தொழில் நிறுவனங்களும், கனிஷ்ட பாடசாலைகளும் இக்கண்காட்சி பயிற்சி முறைகளைக் கண்டு பயன்பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

## அரசாங்க:.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தால் ஏற்பீர்கள்.

''நாம் என்ன செய்வது? எங்களை ஒரு சக்தி ஆட்டிப்படைக்கிறதே என்பதை நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள்.

''மக்களை ஏமாற்றிக் கொண்டு பாராளுமன்றத்தில் நீங்கள் இருப்பதைவிட, இல்லாமல் இருப்பது நல்லது.

''பாராளுமன்றத்தில் உங்களுக்கு இடப்படும் ஆணையை நீங்கள் மறுத்தால், உங்கள் கடிதத்தில் திகதி போடப்பட்டுவிடும்; அந்த நிமிடத்திலிருந்து நீங்கள் பாராளுமன்றத்துக்கு வரமுடியாது.

### பரிதாப நிலை

''மக்களால் தெரிவு செய்யப்பட்டும், இவ்வித ஒரு பரிதாப நிலை ஏற்பட்டதற்காக மிகவும் வருந்துகிறேன்.

''எமது இயக்கத்தில் அதிகாரத் திமிரை அனுமதிப்பவர்கள் அல்லர் நாம்.

''கைகட்டி, வாய்பொத்தி, இச்சபையில் இருப்பதற்காக நாம் நியமிக்கப்படவில்லை.

''உள்ளத்தால் நினைப்பதைக் கூட உங்களால் பேசமுடியாத நிலை.

### நாம் நினைத்ததைப் பேசுவோம்

''ஆனால் எம்மால், நாம் நினைத்ததைப் பேசமுடியும். எனவே உங்களைவிட நாம் பெரியவர்கள்.

''எண்பத்தைந்து வீதமானவர்கள் கிராமங்களில் வாழும் மக்கள். நெல்லை விலைவிக்கப் போராடுபவர்கள்.

''வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இவ்வேளையில், அரைவேளை உணவுண்டு, இரண்டரைவேளை உணவை உண்ணாது வாழும் மிகவும் கஷ்டமான நிலையிலுள்ளனர்.

''வேர்வை இரத்தம் சிந்தி, எந்தவித பொருளாதார அபிவிருத்திக்கு உழைக்கும் எம் விவசாய மக்களுக்கு ஒரு சிறு சலுகைகூட இல்லை!

''நிலமுண்டு; வளமுண்டு, குளமுண்டு; விவசாயம் செய்ய வேண்டிய அவாவுண்டு; ஆனால் நீங்களோ தட்டிக்கழிக்கிறீர்கள்.

### துஷ்பிரயோகம்

''அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், மாவட்டஅமைச்சர்கள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கின்றனர்.

''நான் பேசிமுடித்ததும், இவற்றுக்கெல்லாம் எழுந்து பதில் சொல்லுங்கள்.

''எத்தனை ஆயிரம் பேர் சிறை சென்றாலும், உயிர்கள் பலியானாலும், எமது விடுதலை இலக்கிலிருந்து மாறமாட்டோம்.

''வடக்கில் நடக்கும் இளைஞர்கள் சக்தியை அடக்க எத்தனையோ லட்சம் ரூபாய்கள் செலவாகின்றன.

''வாழ வழியில்லாது விரக்தியுற்ற இளைஞர்களே இவ்வித நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்பதை அரசு சிந்தித்து உணரத் தவறுகிறது.

''தேசியஉணர்வை இடித்து, இடித்து உடைக்க முடியாது. அன்பாகத்தான் அதனை ஏற்படுத்த முடியும்.

இந்த 'பட்ஜட்' ஏழைகளைப் பரதேசிகளாக்கி, ஒட்டாண்டியாக்கிவிட்டது; பணக்காரர்களை மேலும் பணக்காரர்களாக்கிவிட்டது.''

# வீரகத்திப்பிள்ளை மறைவுக்கு நீலன், யோகேஸ் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

''சமூகசேவையாளர் அமரர் வீரகத்திப்பிள்ளை மரணமான செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த வேதனையும் அடைந்துள்ளேன்'' என்று வட்டுக்கோட்டை எம். பி. கலாநிதி நீலன் திருச்செல்வம், நேற்று முன்தினம் காலமான சமூக சேவையாளரும், சீ - நோர் அபிவிருத்தித் திட்ட சமூக சேவைப் பணிப்பாளருமான கதிரவேலு வேலுப்பிள்ளை மறைவு குறித்து விடுத்த இரங்கல் செய்தியில் கவலை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் அச்செய்தியில் தெரிவித்துள்ளதாவது:-

மறைந்த தொண்டர் வீரகத்திப்பிள்ளை காரைநகர் தோப்புக்காடு கிராமத்துக்கும் அரும்பெரும் சேவை ஆற்றியுள்ளார். எந்தப்பொதுப்பணியிலும் பின்னிற்காது உழைத்தவர். இயக்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர். மறைந்த முன்னாள் எம். பி. திருநாவுக்கரசுவுக்குப் பக்கபலமாக இருந்தவர். இவரது இழப்பால் கிராம மக்களும் தொகுதியும் துயருறுகின்றது. நானும் இவரது சேவையைப் பயன்படுத்த முடியாத நிலையில் துயருறுகின்றேன். இவரது குடும்பத்துக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்''



மறைந்த வீரகத்திப்பிள்ளை

### 'யோகேஸ்' அதிர்ச்சி

''வாழ்க்கையின் பெரும் பகுதியை, சமூகப் பணிகளுக்கும், தான் கொண்ட இலட்சியத்திற்குமாகச் செலவிட்ட க. வீரகத்திப்பிள்ளையின் திடீர் மறைவு எனக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்து தனக்கென்று எதுவும் தேடாமல் எப்பொழுதும் சமூக நலனையே நோக்கமாகக் கொண்ட அவரது இழப்பு, உண்மையிலேயே ஒரு பேரிழப்பாகும்'' என்று யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் தனது இரங்கற்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

''வட்டுக்கோட்டை எம்.பி. திரு. திருநாவுக்கரசு மறைந்த பின்னர், நான் அத்தொகுதியில் மக்கள் நலனைக்கவனித்து வந்தேன். இக்கால கட்டத்தில் வீரகத்திப்பிள்ளை அடிக்கடி என்னுடன் தொடர்பு கொண்டு பல சமூக நலத்திட்டங்களைக் கூறுவார், கடந்த வாரம்கூட, தோப்புக்காடு மக்களின் நல்வாழ்வுக்காக அவர் சில திட்டங்களை எனக்கு அனுப்பிவைத்துவிட்டு தொலைபேசி மூலம் வலியுறுத்தினார். எப்பொழுதுமே சமூக நலனில் அக்கறை கொண்ட வீரகத்திப்பிள்ளை போன்றவர்கள் நம்மத்தியில் மிகக்குறைவு அவரது மறைவு மிகவும் கவலை தருகிறது'' என்று திரு. வெ. யோகேஸ்வரன் தமது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (மா)

## ''மாவட்ட வரவு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நீலன் திருச்செல்வம் தமது கன்னிப் பேச்சை நேற்று நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

வட்டு. எம். பி. கலாநிதி நீலன் திருச்செல்வம் மேலும் கூறியதாவது: ''மூலதன செலவினம், வெளிநாட்டு உதவிகள் மாவட்டங்களுக்குப்பகிர்ந்தளிப்பதில் முரண்பாடு இருக்கிறது. தமிழ் மாவட்டங்களுக்குக் குறைந்தளவே கிடைக்கிறது.

''சில அமைச்சர்களின் பொறுப்புக்கள் மாவட்ட அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்டிருப்பதால் அந்தந்த அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை மாவட்ட சபைக்கு வழங்க வேண்டும். மாவட்ட அபிவிருத்திசபைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி மாவட்ட வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப் படவில்லை. இப்போதுகூட அதனைத் தயாரிக்கலாம் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டை நிறுத்தி, மாவட்ட வரவுசெலவுத் திட்டத்திற்கு நிதி ஒதுக்க வேண்டும்.'' [இ]


# ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

## உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்:
போன்: 22370—22438—22537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி
தொலை பேசி இல; 22273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்!

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
இல: 463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105,ஓல்கொட் மாவத்தை,புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல; 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல:88866


# இராணுவத் தாக்குதல் மாணவர்கள் பகிஷ்கரிப்பு

[புலோலி]

இராணுவத் தாக்குதலையடுத்து சேப்பித்த பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மாணவர்கள் நேற்று வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர்.

1500 மாணவர்களில் 300 மாணவர் மட்டுமே வகுப்புகளுக்கு வந்திருந்தனர்.

## மாணவர்கள்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கந்தராசா கொழும்பு இருக்கிறுள்ளதால், அவர் திரும்புமட்டும் மாணவர் அவை தீர்மானம் எடுக்க முடியாதெனத் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது. (மா)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under num ber Q. B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.